පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 290

ආයතනයේ නම: **වතු නිවාස හා ප්‍රජා යටිතල පහසුකම් රාජ්‍ය අමාත්‍යාංශය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 290

நிறுவனத்தின் பெயர்: **தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No : 290

Name of the Institution: **State Ministry of Estate Housing and Community Infrastructure**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 290

நிறுவனத்தின் பெயர் : தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு.

முதலாவது பகுதி

| தொ. இல | குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குறைகளை நிவர்த்தி செய்ய குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் |
|---|---|---|
| 01 | கணக்காய்வு தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்துக்குள் பதில் அனுப்பப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்த பல ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் பதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சில கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களால், ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்க முடியாமல் போயுள்ளது. மேலும் 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா நோய்த்தொற்று நிலைமை காரணத்தால் பணியாட் தொகுதியின் வருகை மட்டுப்படுத்தப்பட்டதால் பதில் அளிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணம் இருந்தது.<br><br>தற்பொழுது ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்துக்குள் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |
| 02 | 2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்தவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்துக்கு அறிவிக்காமை. | 2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்தவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திருமதி வீ.அருள்ராஜா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான தகவல்களை கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்துக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 03 | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ.756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. | 2021.12.31 ஆந் திகதிக்கு உரிய பொருள் கணிப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக பொருள் கணிப்பாய்வுக் குழுவொன்றை நியமித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஏற்பட்ட நிடைமுறைச் சிக்கல் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்குரிய பொருள் கணிப்பாய்வு அறிக்கை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது இதனால் குறித்த அறிக்கை உரிய தினத்துக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை..<br><br>ஆனாலும் தற்போது 01/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் |

A.C.M. Nafeel
Secretary
Ministry of Water Supply and Estate Infrastructure Development
No: 45, St. Michael's Road,
Colombo 03.

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| 04 | வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை. | குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக குறித்த நேரத்துக்கு உரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இதனகத்துப் பின்னர் குறித்த பரிந்துரைகள் உரிய காலப் பகுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |
| 05 | அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை. | அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 06 | நி.ஒ.94 (1) இன் படிசெலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புகள் ஏற்கப்பட்டிருந்தன. | அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மதிப்பீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடும் போது ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் கீழ் பதிலை தெரிவு செய்யும் போது தவறுதலாக ஒதுக்கீட்டு வரம்பை மீறி பொறுப்புகள் ஏற்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் பதில் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் உரிய ஆண்டுக்குள் ஒதுக்கீட்டு வரம்பை மீறி கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. |
| 07 | காலாவதியான வைப்புகள் தொடர்பாக நி.ஒ 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான பிடித்து வைத்துள்ள நிதியை விடுவிப்பது தொடர்பாக, குறித்த கருத்திட்டங்களின் பணிகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.ஆனால், சில கருத்திட்டப்பணிகளை, குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நிறைவு செய்ய முடியவில்லை.மேலும், சில கருத்திட்டங்கள் தொடர்பான பிடித்து வைத்துள்ள நிதியை விடுவிக்குமாறு கோரும் கோரிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது. இதுபோன்ற நடைமுறை விடயங்களால், நி.ஒ.571 இன் படி நடவடிக்கை எடுக்க முடியாது போயுள்ளது என அவதானிக்கப்பட்டது.<br><br>ஆனாலும் தற்பொழுது விடுவிக்கக் கூடிய அனைத்து அனைத்து வைப்புத்தொகைகள் தொடர்பிலும் நி.ஒ 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பணிகள் நிறைவடையாத கருத்திட்டங்களின் பணிகள் இறுதிக் கட்டத்தின் போது கொடுப்பனவுகளுக்கு உரிய பிடித்து வைத்துள்ள தொகையாக ரூ. 5,405,513.87 தொகை மாத்திரம் 12/31/2023 ஆந் திகதியாகும் போது பொது வைப்புக் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.<br><br>அபஇல /22/1996/618/045 மற்றும் 2023 ஜனவரி 03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக இதுவரை பணிகள் நிறைவடையாத கருத்திட்டங்களின் மீதிப் பகுதிகளை நிறைவு செய்தல் இந்த ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் |

**A.C.M. Nafeel**
**Secretary**
**Ministry of Water Supply and Estate Infrastructure Development**
**No: 45, St. Michael's Road,**
**Colombo 03.**

| | | |
|---|---|---|
| | | இந்தப் பகுதிகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்பொழுது மீதமாக உள்ள வைப்புத் தொகையும் விடுவிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| 08 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | கொடுக்கப்பட்டுள்ள கட்டுநிதி முன்பணத்தை ஒரு மாதத்திற்குள் செலுத்துமாறு அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பெறப்பட்டுள்ள அனைத்து கட்டுநிதி முன்பணங்களும் பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்வை செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| 09 | நி.ஒ. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி பணி குறித்த இடைக்கால கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தன. | நி.ஒ. 371 இன் பிரகாரம் எல்லைக்கு உரியவாறு பணி குறித்த இடைக்கால கட்டு நிதி வழங்கப்படும் என்பதுடன் எல்லையை விஞ்சியவாறு பணி குறித்த இடைக்கால கட்டுநிதி வழங்கப்படுவதில்லை என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| 10 | அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட் தொகுதியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | 2019 ஆம் ஆண்டு கட்டம் II மற்றும் III என ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தர பதவிகளில் 2021.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>இந்த நியமனங்களுக்கு உரியவாறு அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: CS/DOS/Policy/01/01/(iii) மற்றம் 2021.03.26 திகதியிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினருக்கு அப்பால் எதிர்பாராதவாறு இணைக்கப்பட்டுள்ள பணியாட் தொகுதியினருக்காக சுற்றறிக்கையின் 06 i ஆம் பிரிவின் பிரகாரம் புதிய பதவிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அரசாங்க சேவைக்கு பட்டதாரி பயிலுநர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கும் போது சேவை நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எல்லையை விஞ்சியவாறு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சுக்காக அப்போது 19 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 175 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த அமைச்சின் சேவையின் தேவைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு சேவைத் தேப்பாட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 19 பதவிகள் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 65 ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சிய பதவியனரித் |

**A.C.M. Nafeel**
**Secretary**
**Ministry of Water Supply and Estate Infrastructure Development**
**No: 45, St. Michael's Road,**
**Colombo 03.**

| | | |
|---|---|---|
| | | தொகுதியினர் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>(முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பணியாட் தொகுதியினர் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் : DMS/CM/18 மற்றும் 2023.03.29 ஆந் திகதியிட்ட கடிதத்தின் பிரதியும் 2023.12.31ஆந் தினத்தன்று இப் பிரிவின் பணியாட் தொகுதி பற்றிய பிரதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.). |

இரண்டாவது பகுதி

| தொ. இல | குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குறைகளை நிவர்த்தி செய்ய குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் |
|---|---|---|
| 01 | கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்காதிருத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிதல் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற பதிவேடுகள் பேணிவரப்படவில்லை. | தற்போது, தகவல் கோரிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்முறையீட்டை அட்டவணைப்படுத்துவதற்கான ஆவணம் இற்றைவரைப்படுத்தி பேணப்படுகின்றது. மேலும், இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து தகவல் கோரிக்கைகளின் மேன்முறையீடுகளும் நிறைவடைந்துள்ளன. |
| 02 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகளை எதிர்பார்த்தபடி நடத்த முடியவில்லை. நாட்டிற்குள் நடமாடுவதற்கான கட்டுப்பாடுகள், அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பணியாட் தொகுதியை அழைப்பது மற்றும் சுகாதார காரணங்களுக்காக ஒன்றுகூடுவதற்கான கட்டுப்பாடுகள் ஆகியவை இதற்கான காரணங்களாக குறிப்பிட முடியும்.<br><br>வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, சேவைப் பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி, உத்தியோகத்தர்கள் கட்டாயமாக பங்கேற்க வேண்டிய பயிற்சி வாய்ப்புகள் மட்டுமே வழங்கப்பட வேண்டும், என்பதால் ஏனைய பாடநெறிகளை உருவாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

A.C.M. Nafeel
Secretary
Ministry of Water Supply and Estate Infrastructure Development
No: 45, St. Michael's Road,
Colombo 03.